# தேசியக் கருத்தரங்கம்

## ‘காலந்தோறும் மொழித் தூய்மையியம்’

*Language Purism over the times*

**23, 24 செப்டம்பர் 2016**

### பதிவுப்படிவம்

பெயர் : ____________________

பதவி : ____________________

நிறுவனம் : ____________________

முகவரி : ____________________

____________________

____________________

____________________

தொலைபேசி : ____________________

மின் அஞ்சல் : ____________________

பணம் செலுத்தும் முறை : தொகை ☐ வரைவோலை ☐

தொகை : ____________ நாள் ____________

வரைவோலை : ____________________

____________________

வங்கியின் பெயர் : ____________________

கட்டுரையின் தலைப்பு :

நாள் : கையொப்பம்

(இப்படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

### மாதிரித் தலைப்புகள்

✶ உலக மொழிகளில் மொழியியல் தூய்மைக் கோட்பாடுகள்
✶ அகராதியியல் மொழித்தூய்மை
✶ அரபு மொழியில் நிலையான மொழித்தூய்மை வரலாறு
✶ ஐஸ்லாண்டிக் மொழியில் மொழித்தூய்மை வரலாறு
✶ துருக்கி மொழியில் மொழிப்புரட்சி
✶ தொல்காப்பியத்தில் மொழித்தூய்மைச் சிந்தனை
✶ சங்க இலக்கியத்தில் பாலிச் சொற்கள் கலப்பு
✶ புறநானூற்றில் மொழித்தூய்மை
✶ சிலப்பதிகாரத்தில் சமஸ்கிருதக் கலப்பு
✶ மணிமேகலையில் உள்ள சமஸ்கிருத பாலிச் சொற்கள்
✶ பரணி இலக்கியத்தில் வேற்றுமொழிச் சொற்கள்
✶ பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் வேற்றுமொழிச் சொற்கள்
✶ ஆழ்வார் பாடல்களில் மொழித்தூய்மை
✶ வைணவ உரைகளில் மொழிக்கலப்பு
✶ நாயன்மார்களின் மொழித்தூய்மைச் சிந்தனை
✶ சைவ சிந்தாத்தத்தில் வேற்றுமொழிக் கலைச்சொற்கள்
✶ வள்ளலார் பாடல்களில் சமஸ்கிருதக் கலப்பு
✶ பிற்கால நீதி நூல்களில் மொழித்தூய்மை
✶ நாட்டுப்புற பாடல்களில் மொழித்தூய்மைச் சிந்தனை
✶ புதுக்கவிதைகளில் மொழிக்கலப்பு இழிநிலை
✶ கீர்த்தனைகளில் தெலுங்கு மொழியின் தாக்கம்
✶ மலேசியத் தமிழ்ப் படைப்புகளில் மலாய் மொழித்தாக்கம்
✶ புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களில் ஐரோப்பிய மொழிக்கலப்பு
✶ பெருஞ்சித்திரனாரின் படைப்புகளில் தூயத் தமிழ்க் கோட்பாடு
✶ பள்ளி அறிவியல், வரலாறு நூல்களில் மொழித்தூய்மை
✶ கல்வியியல் நூல்களில் மொழித்தூய்மை
✶ மருத்துவர் நரேந்திரன் மருத்துவ நூல்களில் மொழித்தூய்மை
✶ பா.வே. மாணிக்க நாயக்கரின் மொழித்தூய்மைச் சிந்தனை
✶ ஜெயகாந்தன், சுஜாதா படைப்புகளில் மொழிக்கலப்பு
✶ பாரதியார் கட்டுரைகள், கவிதைகளில் மொழிக்கலப்பு மற்றும் மொழித்தூய்மை
✶ பெரியாரின் மொழிநடையில் மொழிக்கலப்பு
✶ விடுதலை இதழில் மொழித்தூய்மை
✶ தமிழ்ப் பெயர்களில் இந்தி, சமஸ்கிருதக் கலப்பு
✶ இதழ்களில் மொழித்தூய்மைப் பண்பாடு.
✶ துக்ளக் இதழில் சமஸ்கிருதப் பயன்பாடு
✶ மறைமலை அடிகளாரின் மொழித்தூய்மைத் தொண்டு
✶ பாவாணர் படைப்புகளில் மொழித்தூய்மை
✶ விபுலானந்தரின் படைப்புகளில் மொழித்தூய்மை
✶ தமிழ்நாட்டில் தனித்தமிழ் இயக்க வரலாறு
✶ புலவர் குழந்தையின் மொழித்தூய்மைச் சிந்தனைகள்
✶ பாவேந்தரின் மொழித்தூய்மைக் கொள்கை
✶ தென்மொழி இதழின் மொழித்தூய்மைப் பங்களிப்பு
✶ தெளிதமிழ் இதழின் மொழித்தூய்மைக் கட்டுரைகள்
✶ நற்றமிழ் இதழின் மொழித்தூய்மைக் கட்டுரைகள்
✶ ஊடகங்களில் பிறமொழிக் கலப்பு


# தேசியக் கருத்தரங்கம்

## ‘காலந்தோறும் மொழித் தூய்மையியம்’

*(Language Purism over the times)*

**23, 24 செப்டம்பர் 2016**


# அறிவிப்பும் அழைப்பும்


## தமிழாய்வுத்துறை

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,**

( ‘A’ தரத்தகுதியும், செயல்திற ஆற்றல்வளத் தனித்தகுதியும், சிறப்புத்தொன்மைத் தகுதியும் பெற்றது)

**திருச்சிராப்பள்ளி - 620 002.**

மலைக்கோட்டை மாநகராம் திருச்சிராப்பள்ளியில் ‘உண்மைக்கும் நன்மைக்கும்’ என்னும் விருதுவாக்கோடு கல்விப்பணி ஆற்றிவருகின்ற தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி தமிழகத்தின் பழைமை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்று. தமிழக சேசுசபையினரால் நடத்தப்படுகின்ற இக்கல்லூரி பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்வளத் தனித்தகுதியும், தேசியத்தர மதிப்பீட்டுக் குழுவின் (மூன்றாம் சுற்று) ‘A’ தரத்தகுதியும், சிறப்புத் தொன்மைத்தகுதியும் பெற்றுள்ளது. இத்தகு பெருமைமிகு கல்லூரியில், நூல்களை வெளியிடுவதிலும், கருத்தரங்குகளை நடத்துவதிலும், முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும் முன்னணியில் நிற்கின்ற தமிழாய்வுத்துறை ஆண்டுதோறும் காலத்தின் தேவைக்கேற்ப பயனுள்ள தலைப்புகளில் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இத்தகைய ஆய்வுப்போக்கினை மேலும் வளப்படுத்தும் நோக்கில் தமிழாய்வுத்துறை ‘காலந்தோறும் மொழித்தூய்மையியம்’ என்னும் பொருளில் 23, 24 செப்டம்பர் 2016 ஆகிய நாள்களில் தேசியக் கருத்தரங்கத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

தகவல் தொடர்புக் கருவியாக விளங்கும் மொழி, பண்பாட்டு அடையாளமாகவும், இனத்தின் முகவரியாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு மொழியிலும் காலந்தோறும் அரசியல், சமயம், வணிகம், பண்பாடு ஆகிய காரணிகள் அடிப்படையில் பிற மொழிக்கலப்பு நேர்கிறது. குறிப்பிட்ட தாய்மொழியைப் பேசிவரும் மக்களின் மொழிவளத்தையும், இலக்கியச் செழுமையையும், சிந்தனைத்திறத்தையும், இன அடையாளங்களையும், பண்பாட்டுக்கூறுகளையும் சிதைக்கின்ற பெரும் அச்சுறுத்தலாகப் பிறமொழிக்கலப்பு விளங்குகிறது. இதனால் ஒவ்வொரு சமூகமும் தத்தம் தாய்மொழி மீது கொண்ட பற்றின் காரணமாகப் பிறமொழிக் கலப்புக்கு எதிராகக் காலந்தோறும் களம்கண்டு போராடி வருகின்றன. தனிமனிதர்களும் இயக்கங்களும் முன்னெடுத்த மொழித்தூய்மைச் சிந்தனைகள் ஒவ்வொரு தாய்மொழியையும் பேணிக்காக்கின்ற கேடயங்களாக விளங்குகின்றன.

“பிறமொழிக் கலப்பின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் வாய்ந்த மொழியாகத் திராவிடமொழிகளுள் தமிழ் விளங்குகிறது” என்கிறார் கால்டுவெல். ஆனால், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியும் காலந்தோறும் பிற மொழிக் கலப்புகளைச் சந்தித்தே வருகின்றது. இத்தகைய மொழிக்கலப்புக்கு எதிராகப் போராடிய இயக்கங்களுள் மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம் குறிப்பிடத்தக்கது. தனித்தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இத்தருணத்தில் மொழித்தூய்மையியம் குறித்தும் தனித்தமிழ் இயக்கப்பங்களிப்பு குறித்தும், தனித்தமிழின் இன்றைய போக்குகள் குறித்தும் ஆராய்வதோடு நிகழ்காலத்தில் தமிழுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் பிறமொழிக் கலப்பின் வீச்சுகளைக் கண்டறியும் வகையில் ‘காலந்தோறும் மொழித் தூய்மையியம்’ என்னும் தலைப்பில் இக்கருத்தரங்கு அமைகிறது. எனவே, இதனை அடியொற்றிய தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. மாதிரித் தலைப்புகளில் இடம்பெற்றுள்ள தலைப்புகளிலும், அவற்றைப் போன்ற பிற தலைப்புகளிலும் கட்டுரைகள் அமையலாம்.

கட்டுரைகள் A4 தாளில் ஐந்து பக்கங்களில் பாமினி எழுத்துருவில் (Bamini Font) அல்லது Unicode எழுத்துருவில் கணினித்தட்டச்சு செய்து **tamilseminarsjc@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஆய்வியல் நிறைஞர் பட்ட, முனைவர் பட்ட மாணவர்கள் தங்கள் ஆய்வுக்கட்டுரையை அனுப்பும்போது நெறியாளரிடம் கையொப்பம் பெற்றுச் செம்மையாக்கம் செய்து அனுப்பவேண்டும். கட்டுரைகள் மின்னஞ்சலில் அனுப்பியதைக் கட்டுரையாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுக் கருத்தரங்கத் தொடக்க விழாவின்போது நூலாக வெளியிடப்பெறும்.

கருத்தரங்கின் இரண்டு நாள்களிலும் தேநீர், நண்பகல் உணவு மட்டும் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **பதிவுக்கட்டணம்:** பேராளர் | - | ரூ. 500 |
| ஆய்வுமாணவர் | - | ரூ. 300 |
| பங்கேற்பாளர் | - | ரூ. 250 |

கட்டணத்தொகையினை **The Principal (Tamil Seminar 2016) St. Joseph's College, Tiruchirappalli. Indian Overseas Bank, Chinthamani Branch. SB A/c No : 137501000020007 IFSC Code : IOBA 0001375** என்னும் வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

பதிவுப்படிவம், பேராளர் கட்டணம் செலுத்திய விவரத்தின் நகல், முழுமையான கட்டுரை ஆகியவை வந்து சேர வேண்டிய இறுதி நாள்: **31.08.2016.**

## தொடர்பு முகவரி


முனைவர் **டே. வில்சன்**
கருத்தரங்கச் செயலர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 002.
தொலைபேசி : **0431 - 4226401**
அலைபேசி : **98424 10226**


# கருத்தரங்கக் குழுக்கள்

**புரவலர்கள்**

அருள்முனைவர் **சூ. ஜான்பிரிட்டோ** சே.ச.,
அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்
அருள்முனைவர் **அந்தோணி பாப்புராஜ்** சே.ச.
செயலர், தூய வளனார் கல்லூரி
அருள்முனைவர் **பி. ஆண்ட்ரூ** சே.ச.
முதல்வர், தூய வளனார் கல்லூரி.

**அமைப்பாளர்**

முனைவர் **பி. செல்வக்குமாரன்,** தமிழாய்வுத்துறைத்தலைவர்

**ஒருங்கிணைப்பாளர்** : முனைவர் **அ. குழந்தைசாமி**
**கருத்தரங்கச் செயலர்** : முனைவர். **டே.வில்சன்**
**பொருளர்** : முனைவர் **ரெ. நல்லமுத்து**

**பதிப்புக்குழு**

பேரா. **இ.சூசை**
முனைவர் **ஞா. பெஸ்கி**
முனைவர் **செ. கென்னடி**
முனைவர் **சு. சீனிவாசன்**

**அமர்வு ஏற்பாடுகள்**

முனைவர் **ஆ. ஜோசப் சகாயராஜ்**
முனைவர் **ஆ. இராசாத்தி**
பேரா. **சி. பாக்கிய செல்வரதி**
பேரா. **ஆ. மரிய தனபால்**
பேரா. **ஆ. அடைக்கலராஜ்**

**உணவுக்குழு**

முனைவர் **பொன். புஷ்பராஜ்**
முனைவர் **ரெ. நல்லமுத்து**
பேரா. **இரா.முரளிகிருட்டிணன்**
பேரா. **கா. ஜான்கென்னடி**

**வரவேற்பு & பதிவுக்குழு**

முனைவர் **ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்**
பேரா. **சி. ஷகிலா பானு**
முனைவர் **சு. சீனிவாசன்**
முனைவர் **ம. தனலெட்சுமி**

**நன்னெறிக்குழு**

முனைவர் **சி. ஆரோக்கியதனராஜ்**
பேரா. **த. அருள்பிரகாசம்**
பேரா. **மா. இராஜா**
பேரா. **செ.மணிகண்டன்**
பேரா. **தே. இன்பெண்ட் ஜீசஸ் ஜெபர்சன்**

**வெளித்தொடர்புகள்**

முனைவர் **தி. நெடுஞ்செழியன்**
முனைவர். **த. டான்ஸ்டோனி**